செ.வெ.எண்: 22 நாள்: 14.12.2016

# கிராமப்புறங்களில் அமையப்பெறவுள்ள அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக்கூடம் ஒரு முன்னோடித்திட்டமாகும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு நமது மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு ஊராட்சியை தேர்வு செய்து அதில் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக்கூடம் அமைக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டி ஊராட்சி, புதுப்பட்டியில் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக்கூடம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இதில் அம்மா பூங்கா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும், அம்மா உடற்பயிற்சி கூடம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும் அமையப்பெறவுள்ளது.

மேலும் அம்மா பூங்காவில் குழந்தைகள் விளையாடும் இடம், இறகுப்பந்து விளையாடும் இடம், அழகிய செடிகள் அடங்கிய பூங்கா, விளையாட்டு சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும், அம்மா உடற்பயிற்சிக்கூடத்தில் உடற்பயிற்சி செய்யும் வகையில் பல்வேறு உபகரணங்களும் கொண்டு நவீன முறையில் மொத்தம் 1500 ச.மீ பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இப்பகுதி பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் மிகுந்த பயன்பெறுவார்கள். எனவே கிராமப்புறங்களில் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக்கூடம் ஒரு முன்னோடித்திட்டம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.குமாரவேல், திரு.கருப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**